**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் - (புற நெகும) - 2023**

---

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790–எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆந் திகதிய 3431–எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. கணக்களிப்பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைந்துகொள்ளுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் தொடர்ச்சியான கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் வழங்கல் முறைமைகளின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு அடிப்படை சேவை வழங்கல் உள்ளூராட்சி கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான சிக்கல்கள் முன்வைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2790 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,339.33 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.8 மில்லியன் மிகுதி மதிப்பிடப்பட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட்டது. 3431 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) தொடர்ச்சியான கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 8,700 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் மேலதிக கடன் ஆரம்ப செயற்திட்டத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த செயற்திட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தின் ரூபா 1,071.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.8 மில்லியனுடன் சேர்த்து ரூபா 9,771.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 67.8 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2024 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்,

அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாணத்தில் CKD – 10D பொதி தொடர்பான ரூபா 27 மில்லியன் முற்பணப் பிணைமுறி காசாக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத பணிகள் தொடர்பான ரூபா 27 மில்லியன் சிவில் வேலைகள் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சிவில் பணித் தொகை அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மத்திய மாகாணத்தில் உள்ள CKD 10-D ஒப்பந்ததாரரின் முற்பணப் பிணைமுறி காசாக்கப்பட்டு, அந்தத் தொகை சிவில் வேலைகளின் பெறுமதியில் இருந்து கழிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை ரூபா 26,646,116 அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 04 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டம் வருடத்தில் நான்கு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இரண்டு கூட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சொத்து முகாமைத்துவ மென்பொருள்** | | |
| மென்பொருளை நிறுவிய 07 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 05 இன் கணக்காய்வுகளின் போது மென்பொருளின் தரவுத்தள முறைமையில் மென்பொருளை நிறுவிய காலத்தில் உள்ளிடப்பட்ட சொத்துக்களின் தரவு மாத்திரமே காணப்பட்டதுடன் அந்த தரவுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தத் தரவைப் பயன்படுத்தி சொத்து முகாமைத்துவத்திற்கான முடிவுகளை எடுக்கக்கூடிய எந்தவொரு தகவலையும் இந்த மென்பொருள் மூலம் தயாரித்து பயனருக்குக் கிடைக்கச் செய்ய முடியாது என்பதும், உள்ளூர் அரசாங்க அதிகாரிகளால் மென்பொருள் பயன்படுத்தப்படாமல் அவர்களின் தேவையை | செயற்பாட்டின் போது, மென்பொருள் தொடர்ந்து நாளதுவரையாக்கப்பட வேண்டும் என்பதும் தரவு தொடர்ந்து முறைமையில் உள்ளிடப்பட வேண்டும் என்பதும் உண்மைதான். வீதிகள், தெரு விளக்குகள் மற்றும் பாலங்கள் தொடர்பான தகவல்கள் போன்ற களத்தில் இருந்து சேகரிக்கப்படும் விரிவான தரவுகளின் அடிப்படையில், சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவுகளை பேணுவதற்கு நிலையான புதுப்பிப்புக்கள் அவசியமாகும். அவை | செயற்திட்ட அட்டவணையின் போது மேம்பாடுகளைச் செய்வதற்கும் அதன் பின்னர் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி போன்ற தொடர்ச்சியான செயன்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றுவதற்கு எக்செல் தாள்கள் (Excel Sheets) பயன்படுத்தப்படுவதும் அவதானிக்கப்பட்டது. எனவே, மென்பொருளைப் பயன்படுத்துபவர்களுக்கு போதுமான அறிவு வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | சபைகளின் தொடர்ச்சியான பொறுப்புக்களாகும். | |

**(ஆ) நீர் வழங்கல் செயற்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| குடிநீர் வசதியின்மை, அணுகும் வீதி வசதியின்மை, கட்டிட வடிவமைப்புடன் இணங்காதமை, மயானத்திற்கான பொதுமக்களின் தேவை இல்லாதமை, சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை, தண்ணீர் தொட்டிகள் அமைப்பதில் தரைமட்டத்தை கருத்தில் கொள்ளாதமை, கொவிட்-19 தொற்றுநோய் பாதிப்பு, நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன் போதாமை மற்றும் கேட்போர் கூடம்/ சமூக மண்டபத்தைப் பயன்படுத்துவதற்கான சரியான திட்டமிடல் இல்லாதமை காரணமாக தொடங்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டிருந்த 33 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,809 மில்லியன் செலவிடப்பட்டது. | உப செயற்திட்டங்கள் தற்போது ஒரு உப செயற்திட்டத்தைத் தவிர குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது குறைந்தபட்சம் வேறு ஏதேனும் பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. சில குறைவாக பயன்படுத்தப்படுகிறமை இணங்கப்படுகிறது. அனைத்து மாகாண சபைகளும் சொத்துக்களை விளைவற்றிருக்காமல் முறையாகப் பயன்படுத்துவதற்கு கடுமையாக அறிவுறுத்தப்பட்டது. | அனைத்து சொத்துக்களும் செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் குறித்துரைக்கப்பட்ட பயனாளிகளுக்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| செயற்திட்ட உள்ளக கணக்காய்வை உள்ளடக்கும் வகையில், செயற்படும் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனினும் போதுமான உள்ளக கணக்காய்வு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதவியணி பதவிநிலைகள் குறைக்கப்படுவதால், செயற்திட்டத்தின் கீழ் உள்ளக கணக்காய்வு பிரிவு காணப்படவில்லை. அமைச்சின் உள்ளக கணக்காய்வுக் கிளை இந்த செயற்திட்டத்தை முகாமை செய்து வருகிறதுடன் கணக்காய்வு விசாரணையை மேலும் மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு விளைவும் எடுக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வு முறையாக செயற்பட வேண்டும். |